# 2

# மகிழ்ச்சி! அதிர்ச்சி! கொண்டாட்டம்! வாசிப்பு!

கல்வித் துறையில் பெரும் புரட்சிக்கு வித்திடக்கூடிய ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது உச்ச நீதிமன்றம்.

மழலையர் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருப்பதில் மிகவும் முக்கியமானவை இரண்டு. குழந்தைகளின் பெற்றோரிடம் நேர்காணல் செய்யக்கூடாது. பள்ளிக்கூடத்திற்கு அருகில் வசிக்கும் குழந்தைகளுக்கே முன்னுரிமை தரவேண்டும். பத்து கிலோமீட்டருக்கு அப்பால் வசிக்கும் குழந்தைகளைச் சேர்க்க முடியாது.

சி.பி.எஸ்.இ இயக்குநர் கங்குலி தலைமையிலான குழுவின் பரிந்துரைகளை டெல்லி மாநில அரசு ஏற்று அமல்படுத்தியது. அதை எதிர்த்து சில பள்ளி நிர்வாகங்கள் தொடுத்த மனுவை நிராகரித்த உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அளித்திருக்கிறது.

பள்ளியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் வசிக்கும் குழந்தைகளுக்கு முன்னுரிமை என்பதை ஒழுங்காக அமல்படுத்தினால், ஒவ்வொரு வட்டாரத்திலும் தரமான பள்ளிகள் அமைய வழி பிறக்கும். பள்ளிக்கூட வேன், பஸ் போக்குவரத்துகள் அவசியமற்றுப் போகும். தொலை நோக்கில் இந்தப் பரிந்துரைகளைப் படிப்படியாக பள்ளியிறுதிப் படிப்பு வரை விரிவுபடுத்தினால் இன்னும் நல்லது.

நீண்ட காலமாக நான் வலியுறுத்தி வரும் இன்னொரு கோரிக்கை... அரசு ஊழியர்கள், அமைச்சர்கள் அனைவரின் வீட்டுக் குழந்தைகளும் கட்டாயமாக அரசுப் பள்ளிகளில்தான் படிக்க வேண்டும் என்று விதி ஏற்படுத்துவதாகும். அவர்களின் பிள்ளைகள் அரசுப் பள்ளியில் படித்தாலாவது கல்வித்துறை அதிகாரிகள், அரசுப் பள்ளிகளின் வசதியையும் தரத்தையும் தனியார் பள்ளிக்கு நிகராக உயர்த்துவார்கள் அல்லவா?

*உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றி எனக்கு இரண்டே குறைகள். அது தற்போது டெல்லி மாநிலத்துக்கு மட்டும்தான். நமக்கு எப்போது?*

*குழந்தைகளின் பெற்றோரின் கல்வித் தகுதிக்கு வெயிட்டேஜ் தரவேண்டுமென்ற பரிந்துரையில் எனக்கு உடன்பாடில்லை. படிக்காத ஏழைகளின் குழந்தைகளுக்கு அல்லவா வெயிட்டேஜ் தரவேண்டும்.*

*

*எது வரதட்சணைக் கொடுமை அல்ல என்று உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் விளக்கம் அளித்திருப்பது அதிர்ச்சியைத் தருகிறது.*

*நிலத்துக்கு உரம் போடப் பெற்றோரிடம் பணம் வாங்கி வரும்படி தன் மனைவி பீமாபாயை கணவர் அப்பாசாஹிப் அனுப்பினார். பணம் கிடைக்காத சூழலில் பீமாபாய் தற்கொலை செய்து கொண்டார்.*

*அவசர வீட்டுத் தேவைக்காகவோ, பண நெருக்கடியைச் சமாளிக்கவோ மாமனார் மற்றும் மாமியாரிடம் பணம் கேட்டால் அது வரதட்சணை கேட்டதாக ஆகாது என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர். பணம் கொண்டு வராததற்காக மனைவியை பீமாராவ் அடித்ததாக கூறப்படாததால், அவர் மனைவியை துன்புறுத்தியதாகாது என்பது நீதிமன்றத்தின் கருத்து.*

*ஒருவேளை இந்த வழக்குக்கு இந்த வியாக்யானம் பொருந்தலாம். ஆனால் மாமனாரிடம் ஸ்கூட்டர், கம்ப்யூட்டர், கார், கலர் டி.வி, ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின் இத்யாதிகளைக் கேட்கும் மருமகன்கள்கூட, குடும்பத் தேவைக்காகத்தான் கேட்பதாக வாதாடமுடியும் அல்லவா. தவிர துன்புறுத்தல் என்பது உடலை மட்டுமல்ல, உள்ளத்தைத் துன்புறுத்துவதும் தான். சுண்டு விரல்கூட மனைவியின் மீது படாமல் மன உளைச்சல் ஏற்படுத்தினால், அதுவும் துன்புறுத்தல் ஆகாதா?*

*

*சென்னை மாநகரக் காவல் துறை, அது தான் தோன்றி 150 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே காவல் துறை அமைப்புக்கான சட்டத்துக்கு முன்னோடி 1856ன் சென்னை நகரக் காவல் சட்டம் என்பது சென்னை வாசிகளுக்குப் பெருமையே.*

*தொழில்நுட்ப வளர்ச்சியிலும் புலனாய்வுத் திறமையிலும் இந்தியாவின் இதர மாநிலக் காவல் துறைகளைவிட அதிக வளர்ச்சியில் தமிழகமும் சென்னையும் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. அதே சமயம் காவல் துறை மக்களின் சிநேகிதனாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இன்னும் நிறைய தூரம் போகவேண்டும்.*

மும்பை, ஆட்டோ பயணிகளின் சொர்க்கமாக இருக்கிறது. இங்கே வேறு மாதிரி இருப்பதற்குக் காரணம் ஆட்டோக்காரர்கள் மட்டுமல்ல. போலீசும்தான். லஞ்சம் ஊழலில் ஈடுபடாமல் போலீஸ் இருந்தால், ஆட்டோக்காரரை மட்டுமல்ல அரசியல்வாதியைக்கூடத் திருத்திவிடலாம். இதற்கான முனைப்பு இப்போது பல உயர் அதிகாரிகளிடம் அரும்பியிருக்கிறது. அது கீழ் வரை பரவ வேண்டும்.★

சென்னைப் புத்தகக் கண்காட்சி இந்த வருடம் நடைபெறும் புது இடம் 291 வருடங்களாக இயங்கிவரும் புனித ஜார்ஜ் அனாதை இல்லப் பள்ளி வளாகம். இந்தப் பள்ளியில் 1793லிருந்து 1798 வரை படித்த புகழ்பெற்ற அனாதை தஞ்சை சரபோஜி மன்னர். பழைய அரசர் துல்ஜியின் தத்துக் குழந்தையான சரபோஜியின் உயிருக்கு ஆபத்து இருந்ததையடுத்து தரங்கம்பாடியைச் சேர்ந்த பாதிரியார் ஸ்வார்ட்ஸ், சரபோஜியை இந்தப் பள்ளியில் சேர்த்து, பாதுகாப்பாகப் படிக்கவைத்தார். ஸ்வார்ட்ஸ் பாதிரியார் இறந்தபோது, ஆங்கிலத்தில் இரங்கல் கவிதை எழுதியிருக்கிறார் சரபோஜி.

*

## பூச்செண்டு

பாகிஸ்தானின் போராளிப் பெண் முக்தார் மாய்க்கு இந்த வாரம் மட்டுமல்ல சென்ற வருடத்துக்கான பூச்செண்டையே கொடுக்கலாம். படிப்பறிவற்ற முக்தார் மாய் பாகிஸ்தானின் மீராவாலா கிராமத்தில் ஜாதிக் கொடுமைக்கு உள்ளானவர். அவர் தம்பி உயர் சாதிப் பெண்ணிடம் பேசியதற்கான தண்டனையாக, 300 கிராமவாசிகள் கூடி முக்தாரை நாலு பேர் பாலியல் பலாத்காரம் செய்யவேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள். தீர்ப்பு உடனே நிறைவேற்றப்பட்டது. முக்தார் நிர்வாணமாக ஊர்வலம் கொண்டு வரப்பட்டார். ‘மானமிழந்தவளே செத்துப் போ’ என்று கூடியிருந்தவர்கள் கத்தினார்கள். முக்தார் துவளவில்லை. உள்ளூர் காவல் நிலையம் தொடங்கி ஒவ்வொரு இடமாகப் புகார் கொடுத்தார். கடைசியில் உச்ச நீதிமன்றத்தில் அவருக்கு நீதி கிடைத்தது. ஆறு பேர் தண்டிக்கப்பட்டார்கள்.

தன் போராட்டத்துக்கு உலகம் முழுவதும் இருந்து வந்த பண உதவியைக் கொண்டு முக்தார் தன் கிராமத்திலேயே பெண்களுக்கான பள்ளிக்கூடம் அமைத்து நடத்துகிறார். அவரைக் கொடுமை செய்தவர்கள் வீட்டுக் குழந்தைகளும் அங்கே இப்போது படிக்கிறார்கள். முக்தாரின் வாழ்க்கை அனுபவம் ‘இன் தி நேம் ஆஃப் ஹானர்’ என்ற தலைப்பில் இப்போது புத்தகமாக வெளிவந்திருக்கிறது.

***17.01.2007***

# 6

## காதலிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

காதலுக்காக ஒரு தினம் கொண்டாடப்படுவதை நான் எதிர்க்கிறேன். மருத்துவர் மாலடிமை (டாக்டர் ராமதாஸ்) சொல்லும் காரணங்களுக்காக அல்ல. காதல் என்பது தினமும் கொண்டாடப்பட வேண்டியது. அதை ஒரு தினம் மட்டும் கொண்டாடி விட்டுவிடுவதில் எனக்கு உடன்பாடில்லை.

காதலர் தின எதிர்ப்பாளர்கள் சொல்லும் காரணங்கள் இரண்டுதான். அந்தக் கொண்டாட்டம் வணிகமயம் ஆகிவிட்டது என்பது ஒரு காரணம். தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ், ஆயுத பூஜை வரை எல்லாமே இந்த நுகர்வோர் சமூக அமைப்பில் வணிகமயமாக்கப்பட்ட கொண்டாட்டங்கள் தானே? அவற்றை விமர்சிக்காமல் காதலர் தினத்தை மட்டும் ஏன் விமர்சிக்க வேண்டும்?

'அவையெல்லாம் பண்பாடு; இதுவோ பண்பாட்டுச் சீரழிவு' என்பது இரண்டாவது காரணம். அப்படியானால், காதலைக் கொண்டாடும் சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சீரழிவின் அடையாளம்தானா? டாக்டர் ராமதாஸ் நிறுவிய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ஜி.கே.மணி அச்சிட்டு வெளியிடும் தினசரி ஏடான 'தமிழ் ஓசை'யில் டாக்டர் சொல்கிறார்: '(அன்றைய நாளில்) பொது இடங்களில் கொட்டமடித்துப் பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் தனிநபர் உரிமை என்றெல்லாம் சொல்வார்கள். அதைப் பொருட்படுத்தக்கூடாது. வீட்டில் எதை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். ஆனால், பொது இடங்களில் கொட்டமடிக்க அனுமதிக்கக்கூடாது!'

பொது இடங்களில் கொட்டமடிப்பது தவறு என்பதில் நமக்கு மாறுபட்ட கருத்தே இல்லை. ஆனால், அப்படிக் கொட்டமடிப்பதை யார் எப்போது, எந்தத் தினத்தில் செய்தாலும் தவறு என்று சொல்லலாமே தவிர, காதலர் தினத்தைத் தனிமைப்படுத்திச் சொல்ல எந்த நியாயமும் இல்லை.

அப்படிக் காதலர் தினத்தன்று என்ன கொட்டம் பொது இடத்தில் நடக்கிறது? இளைஞர்கள் தங்களுக்கிடையே வாழ்த்து அட்டைகளை, ரோஜா மலர்களை, சாக்லெட்டுகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். முத்தங்களைப் பரிமாறிக் கொள்பவர்கள் யாரும் பொது இடத்தில் செய்வதில்லை. செய்தாலும் அது கொட்டம் ஆகாது என்பது என் தனிப்பட்ட கருத்து.

பூங்காக்களில், துரித உணவகங்களில், சாலையோரங்களில், வளாகங்களில் இளைஞர்கள் கூடி உட்கார்ந்து அரட்டை அடிக்கிறார்கள். சந்தோஷமாகச் சளசளவென்று பேசிக் கொண்டும் வாய் (ப்ளஸ் மனம்) விட்டுச் சிரித்துக்கொண்டும் இருக்கிறார்கள். உண்மையில், இவர்கள் எல்லாருமே காதலர்கள் அல்லர். காதலர்களாக இருக்க ஆசைப்படுபவர்கள். அவ்வளவுதான்! ராமதாஸ் வயதில் இருக்கக்கூடிய ஒரு தாத்தா இதையெல்லாம் பார்த்து மகிழ்ச்சி அடைவதுதான் நியாயம். சமூக நீதி!

காதலில் எங்கே சமூக நீதி வந்தது என்று வியப்படைய வேண்டாம். நம்முடைய சமூகத்தை ஆட்டிப்படைக்கும் சாதி அமைப்பை இறுதியாகத் தகர்க்கும் வலிமை காதலுக்கு மட்டுமே உண்டு. இட ஒதுக்கீட்டின் மூலம், சாதி சமத்துவத்தை நிச்சயம் எட்டிப் பிடிப்போம். அதற்கும் அடுத்த பரிமாணம், சாதிகளே இல்லாத நிலையை ஏற்படுத்துவது. அது சாதிகள் இடையிலான கலப்புத் திருமணங்களின் மூலம்தான் சாத்தியம். சாதிகளுக்குள்ளேயே திருமணம் செய்யும் அகமண முறை இருக்கும் வரை சாதியை ஒழிக்க முடியாது என்று சரியாகவே சுட்டிக்காட்டியவர்கள் அம்பேத்கரும் பெரியாரும்.

எனவே, காதலைக்கண்டு சாதிய அரசியல்வாதிகள் மிரள்வதில் ஆச்சர்யம் இல்லை. சாதி அடிப்படையில் ஓட்டுகளைத் திரட்ட முடியாத சிக்கலைக் காதலும் கலப்பு மணமும் ஏற்படுத்திவிடும் என்பதால்தான் இந்த மிரட்சி.

கொட்டத்தை வேண்டுமானால் வீட்டில் வைத்துக் கொள்ளட்டும் என்று ராமதாஸ் சொல்கிறார். இது நம் அரசியலுக்கே உரிய இரட்டை வாழ்க்கை முறையின் அடையாளம். வீட்டில் மனைவியை அடிக்கலாம். உதைக்கலாம். தப்பில்லை. ஆனால், வெளியே அவளுடன் கை கோத்து, கண்ணியமாக வலம் வந்தால் போதுமா?

நம் வீட்டுப் பேரக் குழந்தைகளை ஆங்கில மீடியப் பள்ளிக்கு அனுப்பலாம். வெளியே மேடைகளில் மட்டும், மற்ற வீட்டுக் குழந்தைகள் தமிழிலேயே படிக்க வேண்டும் என்று உபதேசிப்பது

மாதிரியான போலித்தனம்தான் நம் அரசியல்வாதிகளுக்குப் பிடித்தமான வாழ்க்கை முறை.

உண்மையில், பொது இடங்களில் கொட்டம் அடிப்பது அரசியல் கட்சிகள்தான். ஒவ்வொரு மாநாட்டின்போதும், பேரணியின் போதும் வேன், லாரிகளில் கும்பல் கும்பலாக வந்து சாதாரணப் பொது மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையை நிலைகுலையச் செய்வது அவர்கள்தான்.

காதலர்களால் சமூக அமைதி சீர்குலைவதில்லை. பஸ் நிறுத்தங் களில் ஈவ்டீஸிங் எனப்படும் பெண் சீண்டலில் ஈடுபடுபவர்கள் பொறுக்கிகள்தான். காதலர்கள் அல்ல. அவர்கள் பஸ் நிறுத்தத்துக்குப் பத்தடி தள்ளி, தனியே தங்கள் தனி உலகின் உரையாடலில் ஆழ்ந்திருப்பார்கள்.

காதல் என்பது உன்னதமான மன நிலை. காமம் என்பது வெறும் உடல் தேவை. அதில் காதல் இல்லை. காதலில் காமம் உண்டு. ஆனால், காதல் என்பது காமத்தை, உடல் தாண்டி, மனம் சார்ந்ததாக மாற்றும் ரசவாதம். உடல்கள் தளர்ந்த பின்னும் உயிர்த்திருக்கக்கூடியது காதல். மனித மனதைப் பக்குவமாக்கும் உணர்ச்சி காதல்!

முதலில் நமது அரசியல்வாதிகள் காதலிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். காதலையும் காமத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படிக் குழப்பும் அரசியலும் சினிமாவும் ஊடகங்களும்தான் நம் இளைஞர்களையும் காதல் பற்றிக் குழப்பி வைத்திருக்கின்றன. இந்தக் குழப்பத்திலிருந்து வெளியே வந்து இளைஞர்களும் காதலிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று நம் சமூகத்தின் இளைஞர்கள் இரு பிரிவாக இருக்கிறார்கள், 25 வயதுக்குள் 25 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை நோக்கி ஓடிக்கொண்டு இருக்கிறது ஒரு பிரிவு. இதற்குக் காதல் சாத்தியப்படவில்லை. காரணம், காதலுக்குத் தேவை நேரம். பல காதல்கள் நேரமின்மையால் மொட்டிலேயே கருகிவிடுகின்றன.

இன்னொரு பிரிவு, மாதம் 3,000 ரூபாய் சம்பளத்தை 30 வயதுக்குள்ளேனும் அடைவோமா என்று ஏங்கிக் கொண்டு இருக்கிற பிரிவு. இதற்கும் காதல் சாத்தியப்படவில்லை, காரணம், இன்று காதலுக்குத் தேவை நேரம் மட்டுமல்ல; ஓரளவேனும் பணமும்கூட!

இந்த விநோதச் சிக்கல்களால் இரு பிரிவு இளைஞர்களும் காதலைவிடக் காமத்தை எளிதில் அடையக்கூடியவர்களாக இருக்கிறார்கள். சில மாதங்கள் நெருங்கிப் பழகி உடல் உறவுக்குப் பின் பிரிந்து விடுவது காதலைவிட எளிதாக இருக்கிறது. இதனால் ஏற்படும் மன வலிகள் ஏராளம். வலி அதிகரிக்க அதிகரிக்க, காமம் வலி

நிவாரணி போலத் தோன்றுகிறது. ஆனால், அது மேலும் வலியைத்தான் ஏற்படுத்துகிறது.

இந்த வலிகளையெல்லாம் நேரமின்மையும், வேலைப்பளுவும், பணமும், இதர வாழ்க்கைச் சுமைகளும் மறக்கடிக்கின்றன. இப்படிக் காமத்தைத் தீர்க்க முடியாதவர்கள் மேலும் மன வலிகளுடன் திரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஊடகங்கள் வழியே இவர்களுக்குக் கிட்டுவது காம ரசம்தானே ஒழிய, காதல் பாடம் அல்ல!

இதற்கு விதிவிலக்காக, மெய்யாகவே காதலிக்கும் காதலர்களுக்கு ஏராளமான எதிரிகள். சாதி வித்தியாசம், அந்தஸ்து வேறுபாடு, போதிய வருவாய்க்கான வேலை வாய்ப்பைத் தேடுதல் போன்ற எதிர்காலச் சிக்கல்களைத் தாற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு, காதலர் தினத்தன்றேனும் கொஞ்ச நேரம் சந்தோஷமாக இருக்க விரும்பினால், பால் தாக்கரேவின் தமிழ் குளோன்கள் மிரட்டுகிறார்கள். காலந்தோறும் மிரட்டல்களைத் தாண்டி காதல் தழைத்ததன் அடையாளம்தான் காதலர் தினம். காதலர்களுக்கு உதவிய புனிதர் வேலன்டைன் பெயர்தான் சரித்திரத்தில் நிற்கிறது. அவர்களை மிரட்டியவர்கள் பெயர்கள் காணாமல் போய்விட்டன!

•

## குட்டு

1. கர்நாடகத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவில் முட்டை வழங்குவதை மத அடிப்படையில் எதிர்த்துப் போராட்டம் நடத்திவரும் பாரதிய ஜனதா கட்சிக்கும் மடாதிபதிகளுக்கும் இ.வா.குட்டு!
2. கூடங்குளத்தில் மேலும் புதிய அணு உலைகள் ஆரம்பிப்பதற்கு ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதினும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபிறகு, அணு உலை பற்றிய ஆட்சேபங்களைத் தெரிவிக்கும்படி பொதுமக்கள் விசாரணை என்ற பெயரில் கண்துடைப்பு செய்யும் மத்திய அரசுக்கு இ.வா.குட்டு!
3. நீதிபதிகளை மிரட்டும் தொனியில் அறிக்கை விடுத்திருக்கும் தி.மு.க. அமைச்சர் ஆற்காடு வீராசாமிக்கும், அவர் பூனைக்கு மணி கட்டியதைக் கொண்டாடும் அனைத்து நெஞ்சங்களுக்கும் இ.வா.குட்டு!

பூச்செண்டு

இ.வா. பூச்செண்டு, எல்லாக் காதலர்களுக்கும்!

***14.02.2007***

# 15

## அடுத்த குடியரசுத் தலைவர் அம்மா !

இன்னும் மூன்று மாதங்களில் (ஜூலையில்) புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ‘‘இந்த முறை முதல் தடவையாக ஒரு பெண்ணைக் குடியரசுத் தலைவராக்குவோம்.’’ என்று 13-12-2006 இதழில் எழுதியிருந்தேன். இந்தக் கருத்துக்குக் கடந்த நான்கு மாதங்களில் இதுவரை ஒரே ஒரு ஆதரவுக் குரல்தான் தமிழகப் பொது வாழ்க்கை வெளியில் ஒலித்திருக்கிறது. (நன்றி: கனிமொழி!)

எந்தப் பெண்ணை ஜனாதிபதியாக்கலாம் என்று மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணித் தலைவர் சோனியா காந்திக்கு ஒரு பரிந்துரைக் கடிதத்தை இந்த வாரம் அனுப்பினேன். ஏன் சோனியாவுக்கு? அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சோனியா யாரைத் தன் கட்சி மூலம் நிறுத்துகிறாரோ அவர்தான் ஜெயிப்பார் என்பதுதான் இன்றைய அரசியல் கணக்கு. அதனால் அவருக்கு கவன ஈர்ப்புக் கடிதம்.

அடுத்த ஜனாதிபதியாக ‘அம்மா’தான் வரவேண்டும் என்பது என் பரிந்துரை. எந்த ‘அம்மா’ ஏன் என்று பார்ப்பதற்கு முன்னு் சோனியா அடுத்த ஜனாதிபதி தேர்வில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களாக நான் குறிப்பிட்டவற்றைப் பார்ப்போம்.

இன்றைய இந்தியச் சூழலில் ஜனாதிபதி பதவிக்கு ஒரு புத்துணர்ச்சியும் புதிய பார்வையும் அவசரமாகத் தேவைப்படுகின்றன. காரணம், வேறு எப்போதையும்விட இன்று மிக அதிகமான மோதலில் ‘இண்டியா’வும் ‘பாரத்’தும் இறக்கப்பட்டு இருக்கின்றன.

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஒரு பக்கம் தொழில் துறையினரும் அவர்களைச் சார்ந்த மேல், நடுத்தர வகுப்புகளும் பெரும் வளர்ச்சியையும் மறுபக்கம் விவசாயிகளும் சாதாரண உழைக்கும் மக்களும் பெரும் வீழ்ச்சியையும் சந்தித்துக்கொண்டு இருக்கின்றனர். நவீன தொழில்நுட்பத்தின் உச்சத்தை சிலர் அனுபவிக்கிற அதே வேளையில், பழைய தொழில்நுட்பங்களின் பயன்கூடப் பலருக்கு

எட்டாத தொலைவில் இருக்கிறது. இந்த முரண்பாடுதான் ஆங்காங்கே வன்முறையாக வெடித்துக் கொண்டு இருக்கிறது. இந்த வன்முறைச் சம்பவங்கள் நோய் அல்ல; நோயின் அறிகுறிகள்தான்.

இப்படிப்பட்ட சூழலில் ஒரு ஜனாதிபதி என்ன செய்ய முடியும்? பெரும் அதிகாரங்கள் நம்முடைய ஜனாதிபதிக்குக் கிடையாது என்றாலும், அடிப்படைப் பிரச்சனைகளில் அரசு ஒரேயடியாக தடம் புரண்டு விடாமல் எச்சரிக்கிற வேலையை சிறப்பாகவே செய்யப் போதுமான அதிகாரங்கள் இருக்கின்றன. ஆளும்கட்சிக் கூட்டணிகள், எதிர்க்கட்சிக் கூட்டணிகள் என்ற இரு அணிகளையும் மக்கள் சார்பிலிருந்து தட்டிக் கொடுக்கவும் குட்டிக் காட்டவும் அரசின் மனசாட்சியாகச் செயல்படக் கூடிய ஒரு ஜனாதிபதி தேவைப்படுகிறார்.

இன்று நமது கிராமங்களுக்கு நேருவின் சாதி மதச் சார்பற்ற சோஷலிசப் பார்வையும், நகரங்களுக்கு காந்தியின் சுற்றுச்சூழல் அக்கறையுடன் நுகர்வுக் கலாச்சாரத்தை நிராகரிக்கும் எளிமையான வாழ்க்கை முறைப் பார்வையும் தேவைப்படுகின்றன.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் வலதுசாரி, இடதுசாரி, நடுசாரிக் கட்சிகள் எல்லாமே மக்களை பிரதானமாக நுகர்வோராகவோ ஓட்டு வங்கிகளாகவோ மட்டுமே பார்க்கும் கடிவாளப் பார்வையில் சிக்கியிருக்கின்றன. மக்களை மக்களாக கண்ணியமும் வாழ்வுரிமையும் உடைய மனிதர்களாகப் பார்க்கும் பார்வையுள்ளவரே மனசாட்சியாக இயங்க முடியும். எனவே , புதிய ஜனாதிபதியை அரசியல் கட்சிகளுக்கு வெளியில் இருந்து தான் நாம் தேர்வு செய்ய வேண்டும்.

அப்படிப்பட்ட ஒருவர்தான் ‘அம்மா’ என்று வாங்காளத்தின் பழங்குடி மக்களால் அன்புடன் அழைக்கப்படும் எழுத்தாளர் மகாஸ்வேதா தேவி.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்க எதிர்ப்பு வரலாற்றில் இன்றும் இருட்டடிப்புச் செய்யப்படும் ஆதிவாசிப் போராட்டத்தைத் தன் நாவலின் மூலம் பரவலாகத் தெரியப்படுத்தியவர் மகா. ஆதிவாசி பிர்சா முண்டாவின் வீரப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, பழங்குடி மக்களைக் குற்றப் பரம்பரையினர் என்று முத்திரை குத்திய பிரிட்டிஷாரின் குற்றப் பரம்பரைச் சட்டத்தை ஒழித்த சுதந்திர இந்தியா, அதே போன்ற ‘குற்றப் பழக்கமுள்ளவர்’ சட்டத்தை (ஹாபிச்சுவல் அஃபெண்டர்ஸ் ஆக்ட்) வைத்திருக்கிறது. தொடர்ந்து இதை எதிர்த்துப் போராடி வருகிறார் மகா.

பெண்கள் வாழ்க்கை தொடர்பான மகாஸ்வேதா தேவியின் ருடாலி, முலைக் கதைகள், கலையம்சம், கருத்து இரண்டிலும் சிறந்தவை. சாகித்ய அகாடமி, ஞானபீடம், பத்மஸ்ரீ, மகசேசே விருது, இந்திய அரசின் உயர் ஆராய்ச்சிப் பேராசிரியர் விருது என பல விருதுகள் பெற்றவர் மகா.

அப்பா மனீஷ் கட்டக், ஒரு கவிஞர். அம்மா தரித்ரி தேவி, சமூகப் பணியாளர். பிரிக்கப்படாத இந்தியாவில், இன்றைய டாக்காவில் 1926ல் பிறந்த மகாஸ்வேதா தேவி, 1942-44ல் வங்கத்தில் கொடும் பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் நிகழ்ந்தபோது, கல்லூரி மாணவியாக தெருத் தெருவாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். இருபது வயதில் நாடகக்காரரும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமான பிஜன் பானர்ஜியை மணந்தார். 1949ல் தபால் தந்தித் துறையில் அரசு வேலை கிடைத்துச் சேர்ந்ததுமே, மகாஸ்வேதா தேவியையும் கம்யூனிஸ்ட் என்று முத்திரை குத்தி வேலையிலிருந்து நீக்கினார்கள். அவர் மீது அப்போது வைக்கப்பட்ட குற்றச்சாட்டு அலுவலக மேஜை டிராயரில் கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் புத்தகங்கள் வைத்திருந்தார் என்பதுதான்.

பின்னர், ஏழை மாணவர்கள் படிக்கும் தனியார் கல்லூரி ஒன்றில் ஆங்கில ஆசிரியராக சுமார் 20 ஆண்டுகள் வேலை பார்த்தார். சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வங்க மொழியில் எழுதிவரும் மகாஸ்வேதா தேவி 100 நாவல்கள், 20 சிறுகதைத் தொகுப்புகள், 5 நாடகங்கள் எழுதியுள்ளார். ‘ஹசார் சவுராசி (1084) கி மா’வும் ‘‘ருடாலி’யும் இந்தியில் திரைப்படங்களாக வந்துள்ளன.

70களில் கொல்கத்தாவில் நக்சல்பாரி இயக்கத்தில் ஏழைகள் மட்டுமல்ல, நகரத்தின் மேட்டுக்குடிக் குடும்பங்களைச் சேர்ந்த ஜீனியஸ்கள் என்று கருதப்பட்ட இளைஞர்களும் சேர்ந்தார்கள். தங்கள் குழந்தைகள் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாகவோ வெளிநாட்டுக்குச் செல்லும் இன்ஜினீயர்களாகவோ ஆவார்கள் என்று கனவு கண்ட அவர்களின் குடும்பங்களுக்குக்கூட அவர்கள் நக்சல்பாரிகள் ஆனது தெரியாது. போலீஸ் வேட்டையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அப்போது கொல்லப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு மேட்டுக்குடி நக்சல்பாரி இளைஞனின் பிணத்தின் சவக்கிடங்கு எண்தான் 1084. அதன் ‘அம்மா’ என்று தலைப்பிட்ட நாடகத்தில், மகன் கொல்லப்பட்ட பின்னர்தான் அவனுடைய தாய் அவனைப் புரிந்துகொள்வதை மகாஸ்வேதா தேவி சித்திரிக்கிறார். நடுத்தரக் குடும்பத்தின் போலித்தனங்கள், சுயநலங்கள் எல்லாம் விமர்சனத்துக்கு உள்ளாகின்றன.

வலதுசாரி, இடதுசாரி என்று எந்த அரசானாலும், கட்சி சார்பற்ற பார்வையுடன் கருத்துத் தெரிவிப்பவர் மகாஸ்வேதா தேவி. 'மொழி என்பது ஓர் ஆயுதம்; ஆனால், அது அக்குள் சிரைப்பதற்கானது அல்ல!' என்பது அவருடைய தீப்பொறி வாக்கியம்.

அண்மையில்கூட நந்தி கிராமம், சிங்கூர் பிரச்னைகளில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக உண்மையறியும் குழுவில் சென்று விசாரித்து, இடது முன்னணி அரசைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

பல வருடங்கள் முன்பு சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதியாக இருந்தபோது, மகாஸ்வேதா தேவிக்கு 'ஞானபீட விருது' வழங்கும் நிகழ்ச்சியில் சம்பிரதாயங்களை உடைத்தார் மகா. தனக்கு விருதை ஜனாதிபதி கொடுத்ததும், பதிலுக்கு அவரிடம் ஒரு மனுவைக் கொடுத்தார். மறு நாள் விடியற்காலையில் தூக்கிலிடப்பட இருந்த ஆந்திரப் பிரதேச மரண தண்டனைக் கைதிகள் மூவர் சார்பான கருணை மனு அது. அதைப் பரிசீலிப்பதாக ஜனாதிபதி சொன்னார். எனவே மறுநாள் தூக்கு நிறுத்தப்பட்டது. பின்னர் அது ஆயுள் தண்டனையாக ஜனாதிபதியால் குறைக்கப்பட்டது. தண்டனைக் காலம் முடிந்து இப்போது கிராமத்தில் தங்கள் குடும்பங்களுடன் அந்த முன்னாள் கைதிகள் வாழ்ந்து வருகிறார்கள்.

மனிதநேயப் பார்வையுடன் அடிமட்ட மனிதர்களுக்கும் புதிய இந்தியாவின் நலன்கள் சென்று சேர வேண்டும் என்ற வழி காட்டிக் குரலைத் தொடர்ந்து அரசுக்கு ஒலித்துக்கொண்டு இருக்கத் தகுதி வாய்ந்தவர் மகாஸ்வேதா தேவி. அண்மையில் ஜெர்மனியில் ஃபிராங்க்பர்ட் நகரில் நடந்த உலகப் புத்தகக் கண்காட்சியில் இந்தியக் கலாசாரம் பற்றி உரையாற்ற சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார் மகாஸ்வேதா தேவி. 2020 இந்தியா பற்றி எல்லோரும் கனவு காணுங்கள் என்று சொல்வது அப்துல் கலாமின் வழக்கம். தன்னுடைய அந்தக் கனவு என்ன என்று மகாஸ்வேதா தேவி அன்று பேசினார்.

'அச்சமில்லாத உள்ளம், நிமிர்ந்து நிற்கும் தலைகள் கொண்ட இந்தியாவை நான் கனவு காண்கிறேன். பிற்படுத்தப்பட்ட என்ற சொல்லுக்கே இடமில்லாத இந்தியா. குழந்தைகள் எல்லோரும் படிக்கும் இந்தியா. சாதாரண மனிதனுக்கு நீதி கிடைக்கும் இந்தியா. பெண்கள் (இருட்டிலிருந்து) வெளிச்சத்துக்கு வரும் இந்தியா. விவசாயிக்கு வாழ்க்கை உத்தரவாதம். ஏழைகளுக்கு வீடுகள், எல்லோருக்கும் நம்பிக்கை தரும் இந்தியா. பசி என்பது யாரும் உச்சரிக்க விரும்பாத கெட்ட வார்த்தையாக மாறும் இந்தியா. மறுபடியும்

தூய்மையாக்கப்பட்ட ஆறுகள். சுயசார்பு. மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை. எல்லோருக்கும் சமமான மருத்துவச் சிகிச்சை. மறக்கப்பட்ட முகங்களும் பொத்தப்பட்ட குரல்களும் மறுபடியும் எழும் இந்தியா. எல்லா மக்களும் படிக்க வேண்டும். எழுத வேண்டும். தங்களுக்காகத் தாங்களே எழுதும் நிலை வரவேண்டும். அறியாமையை ஞானத்தால் வெல்வோம். வெறுப்பை நியாயத்தால் வெல்வோம். தீமைகளை எழுத்து வாளால் வெட்டிச் சாய்ப்போம். இதுதான் என் கனவு' என்றார் மகாஸ்வேதா தேவி.

ஜனாதிபதி ஆவதற்கு இப்போதைய இந்திய அரசியலில் தேவைப்படும் ஒரு தகுதியும் அவருக்கு உள்ளது. 81 வயதாகிறது!

அடுத்த ஜனாதிபதியாக மகாஸ்வேதா தேவியை ஆதரிப்போர் என் போல சோனியாவுக்கு எழுதுங்கள். இன்னும் சிறந்த (பெண்) வேட்பாளர் பற்றிய பரிந்துரைகள் உங்களிடம் இருந்தால், எனக்கும் எழுதுங்கள்.

***25.04.2007***

# 22

## வேண்டும் இன்னொரு அண்ணா!

தமிழக அரசியல், விழாக்கள் நிறைந்த அரசியல்!

அரசியலில் விழாமல் இருப்பதற்கு விழாக்களைப் பயன்படுத்துவது அரசியல் யுக்திகளில் ஒன்றாகும்.

தமிழக அரசியலையே அடியோடு புரட்டிப் போட்ட தலைவரான அண்ணாவின் நூற்றாண்டு விழா இன்னும் இரண்டாண்டுகளில் வருகிறது.

ஆனால் அண்ணா உருவாக்கிய கட்சி, அண்ணாவின் பெயரில் உருவாக்கப்பட்ட கட்சி இரண்டுமே இன்று அண்ணாவின் பெயரைக் கொண்டாடுவதற்கான தகுதியில் இல்லை. ஜனநாயகத்தில் பெரும் நம்பிக்கை வைத்திருந்தவர் அண்ணா.

பெரியார் தன் தலைமையைக் கேள்வி கேட்காமல் ஏற்பவர்களை மட்டுமே கொண்டு இயக்கம் நடத்த விரும்புவதாக அறிவித்தவர். அவரிடமிருந்து பிரிந்து வந்த அண்ணா உட்கட்சி ஜனநாயக அமைப்புடைய கட்சியை உருவாக்கியவர். அவர் பெயரைப் பயன்படுத்தும் இரு கட்சிகளுமே ஒரு நபர் இயக்கத்தில் இயங்குபவையாக மாறிவிட்டன.

கருணாநிதிக்கு எதிராக அ.தி.மு.கவை எம்.ஜி.ஆர். தொடங்கிய ஆரம்பத்திலிருந்தே, அது ஒரு நபர் ஆதிக்க அமைப்பாகத்தான் இருந்து வந்தது. அதே ‘கலாசாரம்’ இன்றும் தொடர்கிறது.

வகுப்புவாரி இட ஒதுக்கீடு என்ற ஒன்றைத் தவிர ஆண்--பெண் சமத்துவம், நாத்திகம், ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை முறை முதலான பெரியார் கொள்கைகள் எதுவும் அரசியலிலும் சரி சமூகத்திலும் சரிஞ் இன்னமும் வேரூன்றவே இல்லை. அரசியல்ரீ-தியாகப் பார்த்தால் பெரியார் தோற்றார். ஜெயித்தவர் அண்ணாதான். 1917ல் காங்கிரசில் இணைந்தது முதல் 1949ல் திராவிடர் கழகத்தை

நடத்தியது வரை வெகு ஜன இயக்கத் தலைவராக இருந்தவர் பெரியார். 1949லிருந்து அந்த இடத்தை தனதாக்கிக் கொண்டவர் அண்ணா.

அண்ணாவை ஜெயிக்க வைத்த ஆயுதமான அன்றைய தி.மு.க.வின் அடிப்படை பலங்கள் என்ன? முதல் - பலம் பொது மக்களிடம் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லத் தேவையான பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மிகுந்த ஏராளமான மூத்த, இளம் தலைவர்கள் இருந்தார்கள். இரண்டாவது பலம்,. தன் இடத்துக்கு அவர்களால் ஆபத்து வந்துவிடுமோ என்று அண்ணா பயப்படவும் இல்லை; அவர்களைச் சாமர்த்தியமாக ஓரங்கட்டவும் இல்லை.

தி.மு.க எழுத்தாளர்களும், ஏடுகளும் தமிழின் தொன்மை, வளமை பற்றிப் பேசுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. உலக அறிஞர்களின் சிந்தனைகளையெல்லாம் தமிழில் வெளிப்படுத்தினார்கள். தெருக்கள் தோறும் தி.மு.கவினர் நடத்திய படிப்பகங்கள் படிக்கும் ருசியை ஏற்படுத்தின. கம்யூனிஸ்டுகளுக்கு நிகராக நாங்களும் படிக்கக்கூடியவர்கள் என்ற பெருமைக்கு தி.மு.க தொண்டர்கள் அன்று ஆசைப்பட்டார்கள். தமிழ்ச் சமூகத்தின் மேடு பள்ளங்களை நிரவிச் சமன் செய்துவிட வேண்டுமென்ற லட்சியத் துடிப்பில் இருந்த அவர்கள், அதற்கான ஆற்றலும் தெளிவும், தலைவர் அண்ணா கை காட்டும் ஏடுகளையும் நூல்களையும் படித்தால் தங்களுக்கும் வந்துவிடும் என்று நம்பினார்கள்.

முதலமைச்சராகி இரு வருடங்கள் முடிவதற்கு முன்பே, திடீரென அண்ணா மறைந்தபோது, தி.மு.கவில் எல்லாமே தலைகீழாக மாறின. 60ஐ எட்டிப்பிடிக்கும்போதே புற்று நோய்க்கு இரையான அண்ணா, இன்னும் 20 வருடங்கள் இருந்திருப்பாரானால், தமிழக அரசியலின் தன்மையே வேறு விதமாக இருந்திருக்கும்.

அண்ணாவின் உண்மையான அரசியல் வாரிசுகள் என்று படிப்பறிவாலும் அரசியல் அனுபவத்தாலும் குறிக்கத்தக்கவர்களாக அன்றைக்கு இருந்த இரண்டு பேர் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன். இருவருமே திரையுலகம் சாராதவர்கள். அறிவுலகம் சார்ந்தவர்கள். அண்ணாவுக்கு இரு உலக ஈடுபாடும் ஈர்ப்பும் இருந்தது. ஆனால் அவர் மனச் சாய்வு அதிகமாக அறிவுலகம் பக்கமே இருந்தது. சினிமாவைவிட நாடகத்தில் அண்ணா சாதித்ததே அதிகம். அதுவும் அவருக்கு கொள்கைப் பரப்புக் கருவி தான். வாழ்க்கைப் பிழைப்புக்கான சாதனமல்ல!

தி.மு.கவுக்குள் அண்ணா மறைவுக்குப் பின் திரையுலகம் சார்ந்த சக்திகளின் கை ஓங்கியது. நாவலர் நெடுஞ்செழியன் முதலமைச்சராக

முடியாமல் தடுத்தது திரையுலக சகாக்களான கருணாநிதி-எம்.ஜி.ஆர் கூட்டுதான். இந்தச் சக்திகளின் செல்வாக்கு கட்சி நெடுகப் பரவிய நிலையில், நாவலர், பேராசிரியர் போன்றோர் மனச் சலிப்புடன் ஒதுங்கியிருந்து வாழ்க்கை முழுக்க அதிகாரமற்ற இரண்டாம் இடத்தில் இருந்து ஓய்வுபெறும் மன நிலைக்கு தள்ளப்பட்டனர். பணமும் மரியாதையும் மட்டுமே ஆறுதல்களாயின.

அண்ணாவுக்குப் பின் அறிவுத் தேடல் மிகுந்த கட்சியாக இருந்த தி.மு.க.வும் அதைத் தொடர்ந்து வந்த அ.தி.மு.க.வும் அதிகாரம், கான்ட்ராக்ட், தரகுலாபங்கள் தேடும் கட்சியாக மாறின. சாக்ரடீஸ், இங்கர்சால், டிக்கன்ஸ், ஷேக்ஸ்பியர் என்றெல்லாம் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தேடிப்பிடித்துப் படித்த சூழல் நியாயமாக இப்போது சார்த்தர், லெவி ஸ்ட்ராஸ், ரேமண்ட் வில்லியம்ஸ், சாம்ஸ்கி, மார்க்வஸ் என்றெல்லாம் காலத்துக்கேற்ப வளரத் தொடங்கியிருக்க வேண்டும். அது நிகழவில்லை. தமிழ் என்பது அறிவு வளர்க்கும் கருவி என்ற நிலையிலிருந்து நீக்கப்பட்டு, உணர்ச்சியை தூண்டும் போதை மருந்தாக ஆக்கப்பட்டது. முத்தமிழ் அறிஞரின் குடும்பத்தில் ஒருவர்கூட கல்லூரியில் தமிழ் இலக்கியம் படிக்க அனுப்பப்படவில்லை என்பது வரலாறு.

தன்னை முதலமைச்சராக்கிய எம்.ஜி.ஆரின் செல்வாக்கைக் குறைக்க அவருக்குத் திரையுலகப் போட்டியாக தன் மகன் முத்துவைக் கொண்டு வந்தார் கருணாநிதி. அதன் விளைவாக தி.மு.க பிளவுபட்டு பலவீனப்படுத்தப்பட்டது. அடுத்த 15 ஆண்டுகளுக்கு எம்.ஜி.ஆர் மறையும் வரை அவருடைய செல்வாக்கைக் கருணாநிதியால் குறைக்கவே முடியவில்லை.

அண்ணா காலத்திய திமு.கவில் அறிவிலும் ஆற்றலிலும் அண்ணாவுக்குச் சில அங்குலங்கள் மட்டுமே அடுத்த நிலையில் இருப்பவர்கள் என்று சொல்லத்தக்க தலைவர்கள் குறைந்தது பத்து பேராவது உண்டு. ஆனால் கருணாநிதியின் தி.மு.கவில் அவருக்கு அடுத்த நிலையில் ஒருவர்கூட இல்லை. அடுத்தவர் இவர்தான் என்று சொல்ல வேண்டுமானால் அது ஸ்டாலின்தான் என்று சொல்லியாக வேண்டிய நிலை. எனவே வைகோ போன்றவர்கள் வெளியேற வேண்டியதாயிற்று.

தி.மு.க. முற்றிலும் கருணாநிதியின் குடும்பத்தினர் நடத்தும் கட்சி என்ற நிலையில்தான் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. கட்சி ஏடு என்று சொல்லப்பட்ட முரசொலிகூட குடும்பச் சொத்தாகத்தான் பல வருடங்கள் இருந்தது. பத்திரிகையைக் கட்சியின்

அறக்கட்டளைக்கு சில வருடங்கள் முன்பு கொடுத்தபோதும்கூட பத்திரிகை அலுவலகக் கட்டடம் குடும்பச் சொத்தாகவே இருந்து வருகிறது.

அண்ணா காலத்தில் சுமார் 50 பத்திரிகைகள் கழகத்தவரால் நடத்தப்பட்டன. பிறகு, அத்தகைய படிப்புச் சூழலே கட்சியில் இல்லை. கட்சி சார்பான டெலிவிஷன் என்று கருதப்பட்ட சன் டிவி குடும்பச் சொத்து தான். (இப்போதுகூட கட்சிக்காக ஆரம்பிக்கப்படுவதாகச் சொல்லப்படும் கலைஞர் டி.வி கட்சியுடையது அல்ல. தனியாருடையது)

தி.மு..க இப்படித்தன் 33ம் வயதிலிருந்து குடும்ப ஆதிக்கம் என்ற நரம்புத்தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டு கோமாவை நோக்கிச் செல்வது வெளிப்படையாகத் தெரிய வந்தபோது கட்சிக்கு வயது 52.

அப்போது கட்சியிலேயே இருந்திராத பேரன் தயாநிதி மாறனை எம்.பியாக்கி மத்திய அமைச்சராகவும் கருணாநிதி ஆக்கியபோதும் சரி, கட்சிக்குள் எந்தச் சலசலப்பும் இல்லை. இப்போது மகள் கனிமொழியை திடீரென எம்.பியாக்கும்போதும் சரி, எந்தச் சலசலப்பும் இல்லை. தயாநிதி, கனிமொழி இருவருக்கும் நிகரான ஆற்றலும் அறிவும் உள்ளவர்கள் அந்த வயதினரில் கட்சிக்குள் வேறு எவரும் கிடையாதா என்ற கேள்வியை ஏன் கட்சிக்குள் யாரும் எழுப்பவில்லை?

அப்படி யாரும் இல்லை என்பது பதிலாக இருக்குமானால், ஏன் அத்தகைய இளைஞர்களைக் கட்சி இத்தனை வருடங்களில் உருவாக்கத் தவறியது ஏன் என்பதே அடுத்த கேள்வி.

கட்சியின் அமைப்பு கடந்த 25 ஆண்டுகளில் உள்ளுக்குள்ளேயே மாறிவந்திருக்கிறது என்பதுதான் காரணம். கட்சியின் சட்ட திட்டங்கள் விதிகள் எல்லாம் எப்படி இருந்தாலும், நடைமுறையில் 1969ல் கருணாநிதி முதலமைச்சரானது முதல் அவரது முக்கிய ஆதரவாளர்களாக இருந்த பல அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், இதர கீழ் மட்டக் கட்சி நிர்வாகிகள் வரை பலரும் தத்தம் சக்திக்கு உட்பட்ட வகையில் தங்கள் வாரிசுகளைக் கட்சிக்குள்ளும் ஆட்சிக்குள்ளும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எனவே, இப்போது இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. திரு.மு.க. பப்ளிக் லிமிடெட் கம்பெனியாகும். இதன் ஷேர்ஹோல்டர்களாக உள்ள பல குடும்பங்களின் இளைய தலைமுறையினர் ஆங்காங்கே பிராஞ்ச் மேனேஜர்களாகவும் கம்பெனியின் ப்ராஜெக்ட் எக்சிக்யூட்டிவ்களாகவும் இருக்கிறார்கள் என்பதால் யாரும் கம்பெனியின் சேர்மன் தன் விருப்பப்படி டைரக்டர்கள் போர்டை

மாற்றியமைப்பதை ஜெனரல் பாடி மீட்டிங்கில் கேள்வி கேட்பதில்லை. அதிலும் நேற்று வரை எம்.டியாக இருந்து வெளியேறியிருக்கும் மாறன் பிரதர்சின் தொழில் போட்டியைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடியான சூழலில் கம்பெனி இருப்பதால், தலைவர் எனப்படும் சேர்மன் பேச்சுக்கு மறு பேச்சு இல்லை.

இன்று தி.மு.க.வுக்குள் நிலவும் உட்கட்சி ஜனநாயகச் சூழல் எந்த அளவுக்குச் சீரழிந்துவிட்டதென்றால், குடும்ப ஆதிக்கம் பற்றி விமர்சனம் எழாதது மட்டுமல்ல; தி.மு.க.வின் பாரம்பரியமான சித்தாந்தத்திலிருந்து சறுக்குவது பற்றிக்கூட விவாதங்கள் இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பு கருணாநிதியின் அரசு அமைத்த தமிழக கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியத்துக்கு உறுப்பினர்களாக முதலமைச்சர் நியமித்த முக்கியமான இருவர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவர்களான வேதாந்தம், ஆர்.பி.வி.எஸ்.மணியன் ஆகியோர்.

கிராமக் கோயில்களின் மரபான தமிழ் வழிபாட்டு முறைகளை நீக்கிவிட்டு, அவற்றையும் சமஸ்கிருதமயமாக்கி வைதிக மரபுக்குக் கொண்டு செல்லும் வேலையில் ஆர்.எஸ்.எஸ். கடந்த 10 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டை பெரியார் அமைப்புகளும் இடதுசாரிகளும் சொல்லி வருகின்றன. இதற்கு முன்பு பி.ஜே.பி.யுடன் கூட்டணி இருந்த காலத்திலும், இவர்களை அரசு வாரியத்தில் நியமித்தார் கருணாநிதி. இப்போது பி.ஜே.பி.க்கு எதிரான காங்கிரஸுடன் கூட்டணி இருக்கும்போதும் நியமிக்கிறார். இது ஏன் என்று கேட்க தி.மு.க. வுக்குள் யாரும் இல்லை.

சுயமரியாதை இயக்கம் நீதிக் கட்சியில் இணைந்ததும், நீதிக் கட்சி திராவிடர் கழகமாக பெயர் மாறியதும், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் உருவானதும் காலத்தின் கட்டாயங்கள். அவற்றால் தமிழ்ச் சமூகம் அடைந்த லாபங்கள் கணிசமானவை. இந்த சங்கிலித் தொடரில் ‘தி.மு.க பப்ளிக் லிமிடெட்’டின் உதயம் என்பது பரிணாம வளர்ச்சி அல்ல!

இன்னும் இரண்டு ஆண்டுகளில் தமிழகம் அண்ணாவின் நூற்றாண்டைக் கொண்டாடவிருக்கும் சூழலில், இன்னொரு திராவிட இயக்க வருகைக்காகத் தமிழகம் காத்திருக்கிறது. குடும்பத்தைக் கட்சியாகக் கருதாமல், கட்சியைக் குடும்பமாகக் கருதிய அண்ணாவைப் போன்ற புதிய தலைமுறைத் தலைவர்கள்தான் அத்தகைய இயக்கத்தை சாத்தியப்படுத்த முடியும்.

***13.06.2007***

# 47

## மோடியின் வெற்றிக்குப் பின்னால்?

குஜராத்தில் நரேந்திர மோடி ஜெயித்துவிடக் கூடாது என்று எதிர்க்கட்சியான காங்கிரஸ் மட்டுமல்ல, அவரது கட்சியான பி.ஜே. பியிலேயே பல மூத்த தலைவர்கள் விரும்பியதை எல்லாம் முறியடித்து, ஜெயித்திருக்கிறார் மோடி.

டெல்லி அரசியலுக்கு மோடி வர ஆசைப்படலாம்; பிரதமர் பதவிக்கேகூட ஆசைப்படலாம் என்ற கவலைகள் பி.ஜே.பிக்கு உள்ளேயே இருந்தன. அருண் ஜெட்லியைத் தவிர, மோடிக்கு பகிரங்கமாக ஆதரவு காட்ட, கட்சிக்குள் மற்றவர்களுக்கெல்லாம் தயக்கம்தான். தேர்தல் முடிவதற்கு முன்பாகவே, அடுத்த பிரதமர் வேட்பாளர் அத்வானிதான் என்று அறிவிக்கப்பட்டதன் பின்னணியில், மோடி பற்றிய பயங்களுக்கும் பங்கு உண்டு.

தேர்தலுக்குச் சில வாரங்கள் முன்பாக, மோடிக்கு எதிராக 'தெஹல்கா' வார இதழ் அம்பலப்படுத்திய தகவல்கள் மிகக் கடுமையானவை. 'கோத்ரா ரயில் எரிந்த சம்பவத்தையடுத்து, ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் குஜராத் நெடுக படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் திட்டமிடப்பட்டவை; போலீஸ், அரசாங்கம், முதலமைச்சர் மோடி ஆகியோரின் முழு ஆதரவுடன் நடத்தப்பட்டவை' என்று தெஹல்கா ஆதாரங்களைக் குவித்தது.

முஸ்லிம்களை படுகொலை செய்வதில் ஈடுபட்டவர்கள், சில வழக்குகளில் அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் தெஹல்கா நிருபர்களின் கேமராக்கள் முன் (கேமரா இருப்பது தெரியாமல்) தங்கள் கொலை வெறி சாகசங்களைப் பெருமையுடன் சொல்லிக்கொண்டார்கள். ஒவ்வொருவரும் மோடி காட்டிய பேராதரவை சிலாகித்துப் புகழ்ந்தார்கள்.

இதற்கு முன்பே 'அவுட்லுக்' வார இதழிடம் மோடியின் அமைச்சர், படுகொலைகளில் போலீஸின் பங்கு தொடர்பாக திட்டமிடுவதற்கு

*மோடி வீட்டில் நடந்த கூட்டத்தில் தானும் பங்கேற்றபோது நிகழ்ந்ததை அம்பலப்படுத்தியிருந்தார். அதை தெஹல்கா ஊர்ஜிதப்படுத்தியது.*

*முஸ்லிம் படுகொலைகள் பற்றி தேர்தல் தருணத்தில் தெஹல்கா அம்பலப்படுத்திய அதிர்ச்சியான தகவல்கள் எல்லாம், காங்கிரஸின் கை ஓங்குவதற்கு ஏன் பயன்படவில்லை? மோடிக்கு எதிராக குஜராத் மக்களை ஏன் அவை திருப்பிவிடவில்லை?*

*இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. தெஹல்கா போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளும், அதையட்டிய பிரசாரமும் சென்று சேரக்கூடியவர் களான நடுத்தர வகுப்பினரும், வசதியானவர்களும் மோடியின் ஆட்சியின் கீழ் நிறையவே பயனடைந்து வருகிறார்கள். மாநிலத்தில் மோடி செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் இந்தப்பிரிவினருக்கு லாபகரமானவை. எனவே, மோடிக்கு எதிராக சொல்லப்படும் மதவெறிக் குற்றச்சாட்டை இவர்கள் பொருட்படுத்தவே இல்லை என்று கருதப்படுகிறது.*

*மோடிக்கு எதிரான கருத்துக்கள் தாக்கம் செலுத்தக்கூடிய பிரிவுகள் முஸ்லிம்களும், தாழ்த்தப்பட்டவர்களும், ஓரளவு ஆதிவாசிகளும்தான். இந்த முறை இவர்களின் ஆதரவு மோடிக்கு எதிராக காங்கிரசுக்குக் குவியாமல் மாயாவதி பிரித்துவிட்டார். சுமார் 80 தொகுதிகளில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி பெற்ற வாக்குகள் காங்கிரசுக்குச் சென்றிருந்தால், அங்கெல்லாம் மோடி தோற்றிருப்பார்.*

*தவிர, தமிழகத்தைப் போலவே காங்கிரசுக்கு குஜராத்திலும் வலுவான ஒரு தலைவர் முகம் இல்லை. இங்கு போலவே அங்கும் தொகுதி தோறும் கோஷ்டிப் பூசல்கள்!*

*இப்படிப்பட்ட சூழல்தான், மோடி மறுபடியும் ஆட்சியைப் பிடிக்க உதவியிருக்கிறது. ஆனால், சென்ற முறையைவிட மோடிக்குப் பத்து தொகுதிகள் இழப்பு. காங்கிரஸ் அணிக்கு 11 தொகுதிகள் லாபம். பெருமளவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நடத்தப்பட்ட மத்திய குஜராத் பகுதியில் சென்ற தேர்தலில் மோடிக்கு 42 இடங்கள்; இந்த முறை 18தான். அங்கே காங்கிரஸின் வெற்றி 7லிருந்து 24க்கு உயர்ந்திருக்கிறது.*

*வாஜ்பாய் இந்துத்துவாவின் நேசமான முகம் என்றால், நரேந்திர மோடி இந்துத்துவாவின் படுமோசமான முகம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. முஸ்லிம்களுக்கு எதிரான போலீஸ் என்கவுன்டரை நியாயப்படுத்தித் தேர்தல் மேடையில் பேசக்கூடியவரால், நாடு முழுவதும் மீடியாக்களும் பத்திரிகைகளும் பெருவாரியாக அவருடைய*

அரசின் பாசிசப் போக்கை அம்பலப்படுத்திய பிறகும், மக்கள் மத்தியில் ஆதரவைத் திரட்டி ஆட்சியைப் பிடிக்க முடிகிறதென்றால், இந்த நிலைமை சில அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறது.

படித்த நடுத்தர வர்க்கம், எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய படிக்காத பாமரர்கள் போன்றது அல்ல என்று பொதுவாக நம்பப்படுகிறது. அறிவைப் பயன்படுத்தத் தெரிந்த வர்க்கம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், குஜராத் கலவரங்களின்போது இந்த வர்க்கம்தான் நவீன கார்களில் உருட்டுக்கட்டைகளுடன் வந்து மண்டைகளைப் பிளந்துவிட்டு கூலாக திரும்பிப் போனது. மெத்தப்படித்த அதிகாரிகள் கையில் இருந்த நிர்வாக இயந்திரம்தான் படுகொலைகளுக்கு உடந்தையாக இருந்தது.

இதெல்லாம் எதுவும் தற்செயலாக நடந்துவிட்ட ஆவேச வெளிப்பாடு அல்ல. மத வெறி, மத விரோதம் என்ற உணர்ச்சிகளை ஒரு சமூகத்தின் ஆழ்மனதில் விதைப்பது எப்படி என்ற சோதனையைச் செய்து பார்த்து வெற்றிபெற்ற 'சமூக விஞ்ஞானி'யாகவே நரேந்திர மோடி காணப்படுகிறார். சோதனை நடந்த லேபரட்டரியாகவே குஜராத் தெரிகிறது.

மோடி வெற்றி பெற்றதன் பின்னணியில் இருக்கும் இந்த ஆபத்தான உண்மையைவிட ஆபத்தானது, 'குஜராத் பரிசோதனை இனி இந்தியா முழுவதிலும் செய்து வெற்றி பெறக் கூடியது' என்று இப்போது சுப்பிரமணியன் சுவாமி முதல் அருண் ஜெட்லி வரை பலரும் பேசத் தொடங்கியிருப்பது.

வரலாறு, கொடூரன் என்று இன்று அழுந்தந்திருத்தமாகக் குறித்து வைத்திருக்கும் ஹிட்லர், அன்று ஜெர்மனியில் தேர்தல்களில் மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்று அதிகாரத்தைப் பிடித்தவன்தான். ஹிட்லரின் அந்த 'ஜனநாயக' வெற்றிக்கான காரணங்களில் இரு காரணங்கள் கவனத்துக்குரியவை. இன்னொரு பிரிவினர் மீதான குரோதத்தைத் தன் மக்கள் மனதில் விதைத்தது ஒரு காரணம்; ஹிட்லரை எதிர்க்கவும் அம்பலப்படுத்தவும் கூடிய சக்திகள் எல்லாம் சிதறிப் பிரிந்து, தம்மைத் தாமே பலவீனப்படுத்திக் கொண்டது மற்றொரு காரணம். இவை குஜராத்துக்கும் பொருந்தும். இப்படியே போனால், நாளைய இந்தியாவுக்கும் பொருந்தும்.

ஒரே ஆறுதல்... ஹிட்லர்தான் கட்சி. கட்சிதான் ஹிட்லர் என்ற நிலை இங்கே வரவில்லை.

இந்த ஆறுதலின் மறுபக்கக் கவலை... நாஜிக் கட்சியில் ஒரே ஒரு ஹிட்லர். பி.ஜே.பியில் ஒரு மோடி மட்டும்தானா..?

## பூச்செண்டு!

*தர்மபுரி பஸ் எரிப்பில் அ.தி.மு.கவினர் தண்டிக்கப்பட்டுள்ள நிலையில், 'எந்தச் சூழ்நிலையிலும் தூக்கு தண்டனை என்பது கூடாது என்பதுதான் என் கருத்து' என்று தெரிவித்ததற்காக கலைஞர் கருணாநிதிக்கு இ.வா.பூச்செண்டு!*

## குட்டு!

*நடிகையை அடித்த தன் படத்து இயக்குநரைக் கண்ணடிக்க முன்வராத அதே நேரத்தில், பிராணிகள் கொடுமைப்படுத்தக் கூடாது என்ற நோக்கத்தின்படி தன் கடமையைச் செய்யும் பிராணிகள் நல வாரியத்தைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்த 'மிருகம்' படத் தயாரிப்பாளருக்கு இ.வா.குட்டு!*

## கேள்வி!

*பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், முற்றிலும் ஏழைகளும் நலிந்தவர்களும் மட்டுமே பயன்படுத்தும் அரசாங்க கண் மருத்துவமனைகளுக்கு நிதி உதவி செய்திருக்கலாமே..! பெரும்பாலான நோயாளிகளிடம் கட்டணம் வசூலிக்கும் தனியார் கண் மருத்துவ அமைப்புக்கு ஒரு கோடி ரூபாய் நன்கொடை அளித்தது ஏன்?*

***02.01.2008***